DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 243/2023
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : DW1 |
| Name | : சின்னராமர் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். நான் பிரதிவாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 03.08.1984 ம் தேதிய வாதி மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் புஷ்பராஜ் ஆகியோர்களின் தந்தையான பெரியசாமி தேவர் குமாரர் பெருமாள் தேவர் என்பவர் புல எண்கள். 194,193, 159 ஆகியவைகளின் சில பகுதிகளைப் பொறுத்து பெற்ற பதிவு கிரைய ஆவணம் ( அசல்) பி.வா.சா. ஆ.1 ஆகும். 20.08.1969 ல் வாதி மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் புஷ்பராஜ் ஆகியோர்களின் தந்தையான பெரியசாமி தேவர் குமாரர் பெருமாள் தேவர் என்பவர் புல எண்கள். 192, 158 ஆகியவைகளின் சில பகுதிகளைப் பொறுத்து பெற்ற பதிவு கிரைய ஆவணம் ( அசல் ) பி.வா. சா. ஆ. 2 ஆகும்.

29.05.1986 ல் வாதி மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் புஷ்பராஜ் ஆகியோர்களின் தந்தையான பெரியசாமி தேவர் குமாரர் பெருமாள் தேவர் என்பவர் புல எண்கள். 174, 165 ஆகியவைகளின் சில பகுதிகளைப் பொறுத்து இராமர் பாண்டிய தலைவர் மனைவி வசந்தியம்மாள் என்பவருக்கு பிறப்புவித்துக் கொடுத்த பதிவு அடமான ஆவணம் ( அசல் ) பி.வா. சா. ஆ. 3 ஆகும். 29.10.1998 ல் 5 ம் பிரதிவாதியின் கணவரும், 6 முதல் 10 பிரதிவாதிகளின் தந்தையுமான பெருமாள் தேவர் குமாரர் புஷ்பராஜ் என்பவர் பிறப்புவித்துக் கொடுத்த பதிவு அடமான ஆவணம் (அசல்) பி.வா.சா.ஆ.4 ஆகும். 05.02.2013 ம் தேதியில் புல எண்.,181/6G ஐ பொறுத்து 3 ம் பிரதிவாதி மற்றும பிற நபர்களின் பெயரில் உள்ள கணினி பட்டா (சான்றிட்ட நகல்) பி.வா.சா.ஆ.5 ஆகும். 08.02.2010 ம் தேதியில் புல எண்.199 ல் 77 ஏருக்கு வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையான பெரியசாமி குமாரர் பெருமாள் தேவர் மற்றும் இருவர் பெயரில் உள்ள கணினி பட்டா ( சான்றிடப்பட்ட நகல்) பி.வா.சா.ஆ.6 ஆகும். 03.09.2019 ம் தேதியில் புல எண்.181/6D ல் உள்ள கிணற்றுக்கு வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையான பெரியசாமித்தேவர் குமாரர் பெருமாள் தேவர் மற்றும் 7 நபர்கள் பெயரில் உள்ள கணினி பட்டா பி.வா.சா.ஆ. 7 ஆகும். 01.08.2015 ல் புல எண்.1272/17B ல் 36.50 ஏருற்கு வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தாத்தாவான ஏகமுத்து தேவர் குமாரர் பெரியசாமித்தேவர் மற்றும் 7 நபர்களின் பெயரில் உள்ள பட்டா 10(1) அடங்கல் கணினி நகல் பி.வா.சா.ஆ.8 ஆகும். 03.09.2019 ம் தேதியில் புல எண்.159/3 ல் 12.50 ஏரிற்கு 3 ம் பிரதிவாதி மற்றும் 6 நபர்களின் பெயரில் உள்ள கூட்டு பட்டா கணினி நகல் பி.வா.சா.ஆ.9 ஆகும். 09.02.2010 ம் தேதியில் புல எண்.194/1 ற்கு 28.50 ஏரிற்கு 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா ( சான்றிடப்பட்ட நகல்) பி.வா.சா.ஆ.10 ஆகும். 03.09.2019 ம் தேதியில் பிராது தபசில் சில சொத்துக்களுக்கு 3 ம் பிரதிவாதி ஷையாரின் தாயார் மற்றும் சகோதரர்கள் பெயரில் உள்ள 10(1) அடங்கல் (கணினி நகல்) பி.வா.சா.ஆ.11 ஆகும்.